**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 416** **நாள் : 04.12.2025**

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், டிட்வா புயல் மழையினை முன்னிட்டு, திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு-74, மங்களபுரம் மற்றும் ஏகாங்கிபுரத்தில் உள்ள மக்களுக்கு இரவு உணவினை வழங்கினார்.**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் டிட்வா புயல் மழையினை முன்னிட்டு 30.11.2025 முதல் இன்று (04.12.2025) வரை ஐந்து நாட்களில் 26,89,750 நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது.**

**இன்று (04.12.2025) மட்டும் 6,10,150 நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் டிட்வா புயல் மழையின் காரணமாக 30.11.2025 முதல் நேற்று (03.12.2025) வரை 20,79,600 நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறாக இன்று (04.12.2025) காலை உணவு 3,24,500 நபர்களுக்கும், மதிய உணவு 1,92,550 நபர்களுக்கும், இரவு உணவு 93,100 நபர்களுக்கு என மொத்தம் 6,10,150 நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. ஆக மொத்தம் 30.11.2025 முதல் இன்று (04.12.2025) வரை ஐந்து நாட்களில் 26,89,750 நபர்களுக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இன்று (04.12.2025) இரவு மணலி மண்டலம், வார்டு-19க்குட்பட்ட மாத்தூர், எம்எம்டிஏ 3வது பிரதான சாலை, அரசு உயர்நிலைப் பள்ளியில் உள்ள நிவாரண மையத்தில் 161 நபர்கள், தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-41க்குட்பட்ட கொருக்குப்பேட்டை, டேனியல் மெட்ரிகுலேஷன் பள்ளியில் உள்ள நிவாரண மையத்தில் 8 நபர்கள், திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு-76க்குட்பட்ட ஸ்ட்ராஹான்ஸ் சாலை, சிஎம்எஸ் பள்ளியில் உள்ள நிவாரண மையத்தில் 1 நபர், என மொத்தம் 170 நபர்கள் தங்க வைக்கப்பட்டு உணவு வழங்கப்பட்டது.

இதில் திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு-74 க்குட்பட்ட, மங்களபுரம் மற்றும் ஏகாங்கிபுரத்தில் உள்ள மக்களுக்கு மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், இரவு உணவினை வழங்கினார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**